(iv) ஓய்வூதிய உரித்துடைய பதவியா என்பது :-----.

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் குறிப்பிட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு அமைய உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதி செய்கின்றேன். இந்தத் தகவல்கள் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என்பது நியமனம் செய்யப்பட முன்னர் உறுதி செய்யப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவராவேன் என்றும், நியமனம் செய்யப்பட்ட பின்னர் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்றும் தெரிவிக்கின்றேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

14. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை பற்றிய விபரம் :

14.1 செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ரூபா (எழுத்தில்) :-----.
14.2 பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
14.3 வழங்கப்பட்ட அலுவலகம் :-----.
14.4 திகதி :-----.

பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை கழன்று போகாதவாறு இங்கே உறுதியாக ஒட்டவும். அதன் பிரதியை உங்கள் வசம் வைத்திருக்கவும்.

15. நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தல் :

15.1 இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற ............................................ திரு./ திருமதி/ செல்வி .. ............................................................................. என்பவர் ..................................... ஆந் திகதி முதல் இந்தத் திணைக்களத்தில் சேவையாற்றி வருகின்றார் என்றும், .................. ஆந் திகதிக்கு முந்திய திருப்திகரமான ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் இந்தத் திணைக்களத்திலுள்ள அறிக்கைகளின் அடிப்படையில் சரியானவை என்றும், குறித்த விளம்பர அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்/ பூர்த்தி செய்யவில்லை என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

15.2 பரீட்சையை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு பரீட்சை அபேட்சகர் கட்டுப்படுதல் வேண்டும். மேற்படி சட்டங்கள் மற்றும் விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற எந்தவொரு தண்டனைக்கும் உட்பட வேண்டி ஏற்படும்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
பதவி முத்திரை :-----.
திகதி :-----.

05-856

---

**வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

**அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்**

அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)

அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தில் பின்வரும் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2019, செத்தெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபேட்சகர்கள் இவ்விரண்டு பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பொறிமுறை கண்காணிப்பாளர் (Mechanical Superintendent) | 07 |
| திட்டப் படவரைஞர் (Draughtsmen) | 03 |

1. **சம்பளம்.**-

1.1 சம்பளக் குறியீட்டு இல. : MN 3-2016

1.2 சம்பள அளவுத்திட்டம் : ரூபா 31,040 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 10 × 750 - ரூபா 57,550 (இந்த சம்பள அளவுத்திட்டம் தொடர்பில் சம்பளம் செலுத்தப்படுவது 2020.01.01 ஆந் திகதி முதலாகும் என்பதுடன், அன்றைய தினம் வரை செலுத்தப்படுவது பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இன் அட்டவணை II இலுள்ள ஏற்பாடுகளின் கீழாகும்.)

2. **ஆட்சேர்ப்புச் செய்யும் தரம் :** தரம் III

3. **கல்வித் தகைமைகள் :**

(அ) தூய கணிதம்/ பிரயோக கணிதம்/ இணைகணிதம் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களுடன் விஞ்ஞான/ கணித பாடப் பிரிவுக்கு உரித்தான மூன்று பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மற்றொரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4. **தொழில்சார் தகைமைகள் :**

(i) மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் தேசிய டிப்ளோமா

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் உயர் டிப்ளோமா,

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற இயந்திரப் பொறியியல் பரீட்சையின் I ஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

(vi) தொழில்துறை தொடர்பிலான தேசிய தொழில்சார் திறமை (NVQ 6) மட்டத்தை பூர்த்தி செய்திருத்தல்,

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானதென தொழில் மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீகரிக்கின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5. **உடல்சார் தகைமைகள் :** ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவிலான உடல் மற்றும் உளரீதியான தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6. **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
(ii) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்;
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான சகல தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்று விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல வகையிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. **வயது**.-

7.1 ஆகக்குறைந்த வயதெல்லை : 18 வயதுக்கு குறையாத
7.2 உச்ச வயதெல்லை : 30 வயதுக்கு மேற்படாத (அதற்கமைய 2001.06.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1989.06.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னர் பிறந்துள்ளவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க தகைமை பெறுவார்கள்.)

8. **ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை.**- எழுத்துமூலப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடையப் பெற வேண்டிய புள்ளி எண்ணிக்கையான 40 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெற்றுக்கொண்டு 03 பாடங்களிலும் சித்தியடைகின்ற விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் தேர்ச்சி ஒழுங்குவரிசைக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையானோர் பொதுவான நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதிவாய்ந்தவர்கள் தெரிவு செய்துகொள்ளப்படுவார்கள்.

8.1 **எழுத்து மூலப்பரீட்சை:**

| பாட இல. | பாடம் | நேரம் | உச்ச புள்ளி | சித்தியடைய பெற வேண்டிய புள்ளி | வினாக் களின் எண் ணிக்கை | வினாப் பத்திரத்தின் தன்மை |
|---|---|---|---|---|---|---|
| 1 | தொழில்நுட்ப அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 | 10 | சுருக்க வினாக்கள் |
| 2 | பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 | 25 | சுருக்க வினாக்கள் |
| 3 | நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 | 25 | சுருக்க வினாக்கள் |

8.2 **எழுத்து மூலப்பரீட்சையின் பாடவிதானம் :**

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| தொழில்நுட்ப அறிவு | வார்ப்பு, பொறிமுறை, பொருத்தல், காய்ச்சியிணைத்தல், மோட்டார் பொறிநுட்பம், தச்சு மற்றும் பராமரிப்பு துறைகள் தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்யும் தகைமைகளாக குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா அல்லது சமமான சான்றிதழ் பெற்றுள்ள ஒருவரிடம் இருக்க வேண்டிய தொழில்நுட்ப அறிவு மட்டத்தை பரிசீலிக்கக்கூடியவாறான வினாக்கள் உள்ளடங்கியிருக்கும். |

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| பொதுஅறிவு | இலங்கையின் புவியியல் வித்தியாசங்கள், வரலாறு, அரசியல், விளையாட்டு மற்றும் அண்மைக்கால முக்கிய நிகழ்வுகள் (சர்வதேசத்தில் பெற்றுக்கொண்ட வெற்றிகள் உள்ளடங்களாக) உலகில் இடம்பெற்றுள்ள முக்கிய நிகழ்வுகள், புவியியல் ரீதியாக இடம்பெறுகின்ற பிரிவினைகள், பிரதான நகரங்கள், சர்வதேச அமைப்புக்கள் மற்றும் அவற்றின் செயற்பணிகள் |
| நுண்ணறிவு | புரிந்துணர்வுச் சக்தி, தர்க்கரீதியான விமர்சன அறிவு, அறிவாற்றல், தொழில்நுட்ப ரீதியில் சரியான தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல், எண் மற்றும் கணித சிக்கல்களை தீர்க்கும் ஆற்றல், மொழிசார், உருவத் தொடர்புகள், அட்டவணை, படம், வரைபுகளைப் பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் பரிசீலித்தல் போன்றன பற்றிய அறிவு பரிசீலிக்கப்படும். |

8.3 **நேர்முகப் பரீட்சை** : புள்ளி வழங்கப்படமாட்டாது என்பதுடன் தகைமைகளை பரிசீலிப்பது மாத்திரம் இடம்பெறும்.

9. மேலுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவான விண்ணப்பப்படிவத்தினை, A4 அளவான கடதாசியின் இருபக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01 முதல் 09 வரையான தலைப்புக்களை முதலாவது பக்கத்திலும் இலக்கம் 10 முதல் 13 வரையான தலைப்புக்களை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சிய இலக்கங்களை மூன்றாம் மற்றும் நான்காம் பக்கங்களிலும் உள்ளடக்கும் வகையில் தயார் செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழிமூலம் தமது கை எழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூலமான விண்ணப்பப்படிவங்கள் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.06.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாக இல்லாத மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். எனவே, விண்ணப்பப்படிவம், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாக உள்ளதா என்பது பற்றியும், சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றியும், பரீட்சைக் கட்டணம் செலுத்துவது தொடர்பிலான பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் கவனம் செலுத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பிலான பற்றுச்சீட்டின் பிரதிகளை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

10. பரீட்சை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் மாத்திரம் நடைபெறும் என்பதுடன், விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

11. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். மேலும், பரீட்சைக் கட்டணம் செலுத்துவது தொடர்பிலான பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றி கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன், பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதிகளை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களின் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகலாம்.

11.1 பொய்யான தகவல்களுக்கான தண்டனை.- விண்ணப்பங்களை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டங்கள், விதிகளுக்கு அமைய யாராயினுமொரு அபேட்சகர் தகுதியற்றவர் என்பது வெளிப்படுத்தப்படுமாயின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் அபேட்சகர் அந்தஸ்தை இரத்துச் செய்ய முடியும்.

12. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் கருதுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்பட்ட, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சை அனுமதிச்சீட்டை அனுப்பிவைப்பார். பரீட்சை அனுமதிச்சீட்டு அனுப்பப்பட்டவுடன் அது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் தமது அனுமதிச்சீட்டுக்கள் கிடைக்காத அபேட்சகர்கள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசத்தைச் சேர்ந்தவராயின், உங்களது மேற்படி விபரங்களுடன், பெக்ஸ் மூலம் அனுமதிச்சீட்டின் பிரதியை துரிதமாக பெற்றுக்கொள்வதற்காக உங்களின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் கோரிக்கைக் கடிதத்தை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்பி வினவுவது உகந்ததாகும். அவ்வாறு வினவும் போது பரீட்சைகள் திணைக்களம் கோருகின்ற ஏதும் தகவல்களை உறுதி செய்வதற்காக உங்கள் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் அனுப்பும் போது பதிவு செய்தமைக்கான பற்றுச்சீட்டையும் ஆயத்தப்படுத்தி வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். விண்ணப்பப்படிவம் கிடைத்ததாக அறிவிக்கப்படுவதில்லை. விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" என தாம் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

12.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். மேற்படி பரீட்சைக் கட்டணத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு செலவு வைக்கப்படக்கூடியவாறு எந்தவொரு தபால்/ உப தபால் அலுவலகத்திலும்/ மாவட்ட செயலகத்திலும்/ பிரதேச செயலகத்திலும் அல்லது அலுவலகத்திலும் செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்திலுள்ள உரிய கூட்டில் கழறாதவாறு உறுதியாக ஒட்ட வேண்டும். இந்தப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக வேறு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணத்திற்கு காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதுடன், பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்தினாலும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியை எதிர்கால உபயோகத்திற்காக தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகலாம்.

12.2 விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்கான பரீட்சை அனுமதிச்சீட்டை வழங்குவதானது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதற்கான அங்கீகாரமாக கருதப்படக்கூடாது.

13. விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிச்சீட்டிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரியொருவர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் ஊடாகவும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரியொருவர் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ஓய்வுபெற்ற அலுவலர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் தத்துவமளிக்கப்பட்ட அலுவலர், அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவிநிலை தரத்தைச் சேர்ந்த அலுவலர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு ஒருவர் அல்லது பிற மதவழிபாட்டுத்தளமொன்றுக்குப் பொறுப்பான மதத் தலைவரொருவராகக் கருதக்கூடிய அந்தஸ்திலுள்ள ஒருவர் ஊடாக சான்றுப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஏற்கனவே அரச நிறுவனமொன்றில் சேவையாற்றுகின்ற விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

14. இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளின் போது விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு உறுதி செய்வதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

14.1 பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது தினத்தன்று பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்டுள்ள அனுமதிச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

14.2 பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு பரீட்சை அபேட்சகர் கட்டுப்படுகின்றார். மேற்படி சட்டங்கள் மற்றும் விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர் உட்பட வேண்டி ஏற்படும்.

15. பரீட்சை பெறுபேறு.- இந்த அறிவித்தலின் 8.1 பந்திக்கு அமைய ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிக்கு குறையாதவாறு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களின் திறமையின் அடிப்படையில் தயார் செய்யப்படுகின்ற பெறுபேறு அட்டை "பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம், கொலன்னாவை" இற்கு பெற்றுக்கொடுக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும், பெறுபேறுகளை தனிப்பட்ட வகையில் அனுப்பிவைக்கப்படும் அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exam.gov.lk இணையத்தளத்தின் மூலம் பெறுபேறுகள் பகிரங்கப்படுத்தப்படும்.

16. இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான அறிவித்தல்களுக்கு இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்.

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்,
கொலன்னாவ வீதி,
கொலன்னாவ,
2019, மே 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)**

(Open Competitive Examination For Recruitment to Posts in Supervisory Management Service - Technological Service Category in the Department of Government Factory) - 2018 (2019)

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ]

சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடுக.)

2. பதவி

பொறிமுறை கண்காணிப்பாளர் [ ]

திட்ட படவரைஞர் [ ]

மேலுள்ள 2 பதவிகளும் [ ]

3. விண்ணப்பதாரியின் பெயர் :

3.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(i) சிங்களம்/ தமிழில் :------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
(ii) ஆங்கிலத்தில் (IN BLOCK LETTERS) :
------------------------------------------------------------------------
உதா. :- (SILVA, A. B. C. D.) --------------------------------------------------

3.2 முதலெழுத்துக்களின் மூலமான பெயர்கள் :-----.
(i) சிங்களம்/ தமிழில் :------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
(ii) ஆங்கிலத்தில் (IN BLOCK LETTERS) :
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------

4. பரீட்சை அனுமதிச்சீட்டை அனுப்ப வேண்டிய முகவரி :-----.
(i) சிங்களம்/ தமிழில் :------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
(ii) ஆங்கிலத்தில் (IN BLOCK LETTERS) :
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

6. பால் : ஆண் - 0 (உரிய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடுக.)
பெண் - 1

7. முகவரி :
I. சொந்த முகவரி : ------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
II. மாவட்டம் : ------------------------------------------------------------------------

8. தொலைபேசி இலக்கம் : தனிப்பட்ட :- | | | | | | | | | | |

9. பிறந்த திகதி :- ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

10. விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது :-----.

11. பிரசாவுரிமை : பரம்பரை பரம்பரையாக/ பதிவு மூலம்

12. கல்வித் தகைமைகள் :
I. க. பொ. த. (சா./ த.) பரீட்சை :
பரீட்சை இல. :-----. ஆண்டு :----. மொழி மூலம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் | சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| (1) .................................... | ........................ | (6) .................................... | ........................ |
| (2) .................................... | ........................ | (7) .................................... | ........................ |
| (3) .................................... | ........................ | (8) .................................... | ........................ |
| (4) .................................... | ........................ | (9) .................................... | ........................ |
| (5) .................................... | ........................ | (10) .................................... | ........................ |

II. க. பொ. த. (உ./ த.) பரீட்சை :
பரீட்சை இல. :-----. ஆண்டு :----. மொழி மூலம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| (1) ........................................ | ........................ |
| (2) ........................................ | ........................ |
| (3) ........................................ | ........................ |
| (4) ........................................ | ........................ |

13. தொழில்சார் தகைமைகள் பற்றிய விபரம் :

| தொடர் இல. | பாடநெறியின் பெயர் | நிறுவகம் | கால எல்லை | பெறுபேறு |
|---|---|---|---|---|
| 01. | | | | |
| 02. | | | | |
| 03. | | | | |

14. தற்போது ஏதும் பதவியை வகிப்பவராயின் அது பற்றிய விபரம் :

(i) பதவியும் தரமும் :-----.
(ii) நியமனம் பெற்ற திகதி :-----.
(iii) நிறுவனம் :-----.
(iv) ஓய்வூதிய உரித்துடைய பதவியா என்பது :-----.

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் குறிப்பிட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு அமைய உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதி செய்கின்றேன். இந்தத் தகவல்கள் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என்பது நியமனம் செய்யப்பட முன்னர் உறுதி செய்யப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவராவேன் என்றும், நியமனம் செய்யப்பட்ட பின்னர் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்றும் தெரிவிக்கின்றேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

15. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை பற்றிய விபரம் :

15.1 செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ரூபா (எழுத்தில்) :-----.
15.2 பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
15.3 வழங்கப்பட்ட அலுவலகம் :-----.
15.4 திகதி :-----.

பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழன்று போகாதவாறு இங்கே உறுதியாக ஒட்டவும். அதன் பிரதியை உங்கள் வசம் வைத்திருக்கவும்.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்துள்ள ........................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், குறித்த பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும், ........... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

------,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :-----.
சான்றுப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
பதவி முத்திரை :-----.

17. அரசாங்க சேவையின்/ மாகாண அரசாங்க சேவையின் ஊழியராயின், திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல் :

17.1 திரு./ திருமதி/ செல்வி ........................................ என்பவர் இந்தத் அமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர ஊழியராக சேவையாற்றி வருகின்றார் என்றும், இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை

திகதி :-----.

05-857

---

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

கத்தோலிக்க மறைப் பாடசாலை

**இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2018 (2019)**

**சட்ட விதிமுறைகள் :**

1. கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இதற்கென அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நிலையம்.**- நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரரின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். இருப்பினும் குறிப்பிட்ட ஒரு பரீட்சை நிலையத்தில் போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாவிடின் அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அதற்குரிய விண்ணப்பதாரர்கள் அதற்கு அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தில் மேற்படி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்கள் மற்றும் நகரங்களடங்கிய பட்டியல் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளன.

3. **ஊடக மொழி.**- இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் மாத்திரம் நடைபெறும்.

4. **தகுதி.**- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் கீழ்வருவனவற்றில் ஏதேனும் ஒரு தகைமையைப் பெற்றிருக்க வேண்டும்.

4.1 மறைப் பாடசாலையொன்றில் பத்தாம் தரத்தில் சித்தி பெற்று மறைப் பாடசாலையின் இறுதிச் சான்றிதழ் பத்திர வகுப்பில் ஒரு வருடம் கல்வி பயின்றிருத்தல் ;

4.2 தேசிய கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்தி பெற்றிருத்தல். அல்லது சிரேட்ட பாடசாலை சான்றுப்பத்திர பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

4.3 அந்தந்த மறை மாவட்டத்தில் நடைபெறும் வருடாந்த மறைக்கல்வி பரீட்சையில் பதினோராந்தர வகுப்பில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு.**- (i) இப்பரீட்சையில்தோற்றும்விண்ணப்பதாரர்கள்மேலே பந்தி 4 இல் கேட்கப்பட்டுள்ளதற்கேற்ப தகுதி பெற்றுள்ளார் என்பதை மறைக்கல்வி பாடசாலைப் பொறுப்பாசிரியர் அல்லது பங்குக் குருவானவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் மறைப் பாடசாலை விண்ணப்பதாரராக மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

5. **விண்ணப்பித்தல் :**

5.1 கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்காக பரீட்சைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மறைப் பாடசாலைகளுக்கும் தேவையான விண்ணப்பப்படிவங்கள், அறிவுறுத்தல் பத்திரங்கள் உரிய காலத்தில் வழங்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்பப்படிவங்கள் கிடைக்காவிட்டால் மறைப் பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகிய விபரங்களை உள்ளடக்கிய கடிதம் மூலம் இவ்வறிவித்த லின் 5:6 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2019.06.14 ஆந் திகதிக்கு முன் அறிவித்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5.2 விண்ணப்பதாரர் தனிப்பட்ட விண்ணப்பதாரராக பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார். ஆயினும், அறிவுறுத்தல் 4 இல் கேட்கப்பட்டுள்ள தகுதியிருப்பின் தமது வதிவிடத்துக்கண்மையிலுள்ள மறைப் பாடசாலையின் ஊடாக பரீட்சைக் கட்டணமாக 200.00 ரூபாவைச் செலுத்தி பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கலாம். இதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் சகல மறைப் பாடசாலைகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

5.3 மறைப் பாடசாலைப் பொறுப்பாசிரியரினால் முன்வைக்கப்படும் இவ்விண்ணப்பங்களின் இரண்டு பிரதிகள் தயாரிக்கப்பட்டு முதல் பிரதி பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்பதுடன் இரண்டாம் பிரதி மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் வசம் வைத்திருத்தல் வேண்டும். இவ்விண்ணப்படிவம் இரண்டிலும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

5.4 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2019.06.28 ஆந் திகதி ஆகும்.

5.5 விண்ணப்பங்கள் தெளிவாகவும், பிழையின்றியும் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு நாம் குறிப்பிட்ட கடைசித் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.6 மறைப் பாடசாலையின் கணினி இலக்கத்தையும், முகவரியையும் சரியாகக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு முகவரி மாற்றப்பட்டிருப்பின் அதை எமக்கு அறிவிக்க வேண்டும். தொலைபேசி வசதியிருப்பின் அதன் இலக்கத்தையும் குறிப்பிடுக. நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு (நிறுவனம் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிப் பரீட்சை - 2019" என்பதையும் விண்ணப்பிக்கும் நகரத்தையும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்துடன் வேறெந்த சான்றிதழையும் இணைக்கத் தேவையில்லை.

5.7 விண்ணப்பதாரியின் உரிய சான்றிதழ் பற்றிய தகுதியை, விண்ணப்பதாரியை உறுதி செய்யும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் அல்லது பங்குத் தந்தை அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

5.8 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் எல்லா பரீட்சார்த்திகளும் விண்ணப்பப்படிவத்தில் பூரணப்படுத்தியுள்ள தகவல்களை தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்து கையொப்பமிட வேண்டும்.

5.9 விண்ணப்பதாரிகள் ஒப்பமிடாத, அழிக்கும் வெண்மை பயன்படுத்திய மற்றும் வேறு குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பப்பத்திரங்களும், விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்கான கட்டணம் 200.00 ரூபாவாகும். இருப்பினும், முதன் முதலில் தோற்றும் விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்த தேவையில்லை. நூன சித்தியைப் பூர்த்தி செய்ய வேண்டிய பாடத்திற்கான கட்டணம் 50.00 ரூபா ஆகும்.

6.1 **பரீட்சைக் கட்டணம் செலுத்தல்.**- விண்ணப்பதாரர் அனைவரினதும் பரீட்சைக் கட்டணத்தை பொறுப்பாசிரியர் ஒன்று சேர்த்து இலங்கையில் ஏதாவதொரு அஞ்சலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, அப்பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தின் பின்னால் ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை நீங்களும் வைத்திருப்பது நன்று (முத்திரை மற்றும் காசுக்கட்டளை போன்றவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

6.2 **பரீட்சைக் கட்டணம் மீளப்பெறல்.**- எக்காரணங் கொண்டும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ, மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

7. **அனுமதிப்பத்திரம்.**- பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், விண்ணப்பித்த மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரூடாக அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்தி பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமது அனுமதிப்பத்திரத்தைக் கொடுக்காவிட்டால் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தை விட்டு வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவரது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதிப்பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் மறைப் பாடசாலையின் பொறுப்பாசிரியரினால் அல்லது பங்குத் தந்தையினால் அல்லது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரினால் அல்லது அரசின் நிரந்தர சேவையில் நிறைவேற்றுத்தரத்திலுள்ள அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின், அந்த மறைப்பாடசாலை பொறுப்பாசிரியரினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங் களில் கீழ்க் குறிப்பிட்ட விபரங்களை அறிவிக்க வேண்டும் :-

(1) பரீட்சையின் பெயர் ;

(2) மறைப் பாடசாலையின் பெயர் ;

(3) மறைப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள கணினி இலக்கம் ;

(4) விண்ணப்பதாரியின் முழுப் பெயரும் முகவரியும் ;

(5) விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/நகரம் ;

(6) விண்ணப்பப்பத்திரம் அஞ்சலிடப்பட்ட அஞ்சலகம் ;

(7) விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட பதிவு எண்ணும் திகதியும் ;

(8) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அந்தப் பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, அஞ்சலகம்.

8. **ஆள் அடையாளம்.**- ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மண்டப மேற்பார்வை யாளர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் பரீட்சார்த்திகள் தம்மை அடையாளப்படுத்தும் ஆவணத்தைச் சமர்ப்பிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஒன்றைப் பயன்படுத்தலாம் :-

8.1 தேசிய ஆள் அடையாள அட்டை ;

8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

8.3 தபால் ஆள் அடையாள அட்டை.

9. **சித்தி பெற்றமையைத் தீர்மானித்தலும், பெறுபேற்றை வெளியிடலும்.**- இத்தேர்வுக்கான வினாத்தாள்களின் எண்ணிக்கை நான்கு ஆகும். பரீட்சையில் சித்திபெறுவதற்கு பரீட்சார்த்தி நான்கு வினாத்தாள்களிலும் சித்தி பெற வேண்டும். ஆயினும் இந்நான்கினுள் ஏதேனும் ஒரு பாடத்தில் மாத்திரம் சித்திபெறாவிடின், அது நூன சித்தியாகக் கருதப்படும். பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து தொடர்ந்து வரும் இரண்டு (02) வருடங்களுக்குள் அந்நூன சித்தி பெற்ற பாடத்திற்கு மீண்டும் தோற்றி அதில் சித்தி பெற வேண்டும். (இது 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.) நூன சித்தி பெறும் மாணவர்கள் அதனைப் பூர்த்தி செய்யும் போது அப்பாடத்திற்கு மட்டுமே தோற்ற வேண்டும்.

9.1 எல்லாப் பாடங்களின் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படுவதுடன் சித்தி பெறும் தரங்களுக்குரிய புள்ளி இடைவெளி மற்றும் குறியீடு என்பன கீழே தரப்பட்டுள்ளது :

| புள்ளி ஆயிடை | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமைச் சித்தி | C |
| 70-100 | விசேட சித்தி | D |

9.2 பரீட்சார்த்திகளின் பெறுபேற்று அட்டவணை அந்தந்த மறைப் பாடசாலைப் பொறுப்பாளருக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

10. **சான்றிதழ் பத்திரம்.**- இத்தேர்வில் சித்தி பெற்ற அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

11. **விடைத்தாள் மீள் பரிசீலனை.- மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரின் வேண்டுகோளின்படி மாத்திரம்** விடைத்தாள்கள் பரிசீலனை செய்யப்படும். இத்திணைக்களத்தினால் வெளியிடப்படும் படிவத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம். இதற்காக அறவிடப்படும் கட்டணத் தொகை பற்றி அவ்வப்போது மாற்றம் செய்ய இடமுண்டு. அதுபற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படும். ஏற்கனவே வெளியிடப்பட்ட பெறுபேற்றில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இப்பணம் மீளத்தரப்படும். எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பதாரருக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைத்தாள்களைப் பரிசிலிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

12. இச்சட்டதிட்டங்களுக்கும், பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு அனைத்து விண்ணப்பதாரரும் கட்டுப்பட்டு இருப்பதோடு இந்த ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்காதோர் பற்றிய விடயத்தில் பரீட்சை ஆணையாளரினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதும் ஆகும்.

பி. சனத் பூஜித,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, மே 10.

**கத்தோலிக்க மறை**

(2007 இல் இருந்து நடாத்தப்படும் பரீட்சைக்கான பாடத்திட்டம்)

இத்தேர்வு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 03 மணித்தியாலங்களைக் கொண்ட 04 வினாத்தாள்களை உள்ளடக்கியது.

**வினாத்தாள் I**

கத்தோலிக்க விசுவாசம்

(அ) இவ் வினாத்தாள் திருத்தூதரது விசுவாச அறிக்கையின் ஆரம்ப கற்பித்தலை அடித்தளமாகக் கொண்டுள்ளது :

* படைத்தவர்
  - உலக ஆரம்பம்
  - படைப்பின் அழகு
  - படைப்பைப் பாதுகாத்தல் (தொ. நூ. 1, 2, 3)

* மீட்பர்
  - இயேசுக்கிறிஸ்து (யோவான் 1 : 1-14)
  - இறையரசு பற்றிய படிப்பினை (மத்தேயு 5, 6, 7)
  - உவமைகள் (மத்தேயு 13 : 1-52)
  - புதுமைகள் (யோவான் 11 : 38-45,
    லூக்கா 8 : 26-39,
    மாற்கு 2 : 1-12, 4 : 35-41)

* தூய ஆவியானவர்
  - செயற்பாடுகள் (யோவான் 7 : 37-39,
    14 : 15-31, 16 : 5-15,
    1 கொரிந்தியர் 12 : 4-11)

* கத்தோலிக்க திருச்சபை
  - ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்
  - திருச்சபை கிறிஸ்துவின் சரீரமாக
    ⇨ உரோமையர் 12 : 4-21
    ⇨ 1 கொரிந்தியர் 12 : 12-31
  - திருச்சபையின் ஆட்சித்திட்டம்
  - அங்கீகரிக்கப்பட்ட அதிகாரம்கொண்ட பணி
  - துறவற பணி
  - பொதுநிலையினர் பணி

* மனித வாழ்வின் மாற்றம்
  - மனிதனின் இறுதி நிகழ்வு
  - புதிய வானமும் புதிய பூமியும் (திருவெளிப்பாடு 21 : 1-4)

**வினாத்தாள் II**

கத்தோலிக்க வாழ்வுக்கான வழி

(ஆ) கத்தோலிக்க வாழ்வுக்கு வலிமை தரும் திருவழிபாடு

* திருப்பலியும் திருப்பலிச் சடங்கும்
* பாஸ்கா மறைபொருள்
* இறையருள்
* திருவருட்சாதனங்கள் (பொதுவான பண்பு)

  * தொடக்க திருவருட்சாதனங்கள் :
    ⇨ திருமுழுக்கு
    ⇨ உறுதிப்பூசுதல்
    ⇨ திவ்விய நற்கருணை

  * சுகத்தை வழங்கும் திருவருட்சாதனங்கள் :
    ⇨ ஒப்புரவு
    ⇨ நோயிற்பூசுதல்

  * பணிக்காக ஏற்படுத்தப்பட்ட திருவருட் சாதனங்கள் :
    ⇨ குருத்துவம்
    ⇨ மெய்விவாகம்

**வினாத்தாள் III**

கத்தோலிக்க நல்லொழுக்க வாழ்வு

(இ) கத்தோலிக்க நல்லொழுக்கம்

* பத்துக் கட்டளைகளும் அன்பின் கட்டளைகளும் - இரு பக்கங்கள்
* பத்துக் கட்டளைகளை நிறைவாக்கிய இயேசுக்கிறிஸ்து (மத்தேயு 5 : 21-47)
* சமவெளிப் பொழிவு (மலைப்பொழிவு) (லூக்கா 6 : 17-49)
* அறிவு, சுதந்திரமான விருப்பு, உணர்வுகள்
* இறை உறவின் பண்புகள்
* மனச்சாட்சி
* இறைவனை அன்பு செய்தல் (1-3 கட்டளைகள்)
* அயலவரை அன்பு செய்தல் (4-10 கட்டளைகள்)
* பத்துக் கட்டளைகளில் தோன்ற வேண்டிய நற்பழக்கங்கள்
* கத்தோலிக்க தனித்துவ அடையாளம்

**வினாத்தாள் IV**

**செப வாழ்வு**

(ஈ) இறையுறவை வளர்க்கும் செபம்

* பழைய ஏற்பாட்டில் செபம்
  - ஆபிரகாம்
  - மோசே
* புதிய ஏற்பாட்டில் செபம்
  - கிறிஸ்து செபித்த விசேட சந்தர்ப்பங்கள்
  - செபம் தொடர்பான விசேட படிப்பினைகள் (லூக்கா 11 : 1-13)
* திருச்சபை வாழ்வில் செபம்
  - புகழ்தல்
  - நன்றி கூறல்
  - வேண்டுதல்
  - பரிந்துரை செபங்கள்
  - தியானத்தின் மூலம் செபித்தல்
* கிறிஸ்து கற்பித்த செபத்தில் (பரலோக மந்திரம்) வேண்டுதல்கள் ஏழு
  - உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக
  - உம்முடைய அரசு வருக
  - உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூவுலகிலும் செய்யப்படுவதாக
  - எங்கள் அனுதின உணவை எங்களுக்கு அன்றாடம் அளித்தருளும்
  - எங்களுக்குத் தீமை செய்கின்றவர்களை நாங்கள் பொறுப்பதுபோல் எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்
  - சோதனையில் எங்களை விழ விடாதேயும்
  - தீமையில் இருந்து எங்களை இரட்சித்தருளும்
* பல்வித பக்தி முயற்சிகள்
  - செபமாலை
  - நவநாட்கள்
  - திருமணித்தியாலம்

**பயன்படுத்தக்கூடிய நூல்கள்**

- புதிய கத்தோலிக்க திருமறை
- பெரிய குறிப்படம்
- திருவிவிலியம் (குறிப்பிட்ட பகுதிகள்)
- இரண்டாம் வத்திக்கான் சங்க,
  ⇨ திருவழிபாடு
  ⇨ இன்றைய உலகில் திருச்சபை
  ⇨ கிறிஸ்துவின் திருச்சபை
  ⇨ பொதுநிலையினரின் திருப்பணி

இணைப்பு - I

அந்தந்த மாவட்டங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள நகரங்களும் நகர எண்களும்

**மாவட்டம் 01 - கொழும்பு**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பொரளை | 101 |
| களுஅக்கலை | 102 |
| பன்னிப்பிட்டிய | 103 |
| மொறட்டுவை | 104 |

**மாவட்டம் 02 - கம்பஹா**

| நகரம் | நகர எண் |
|---|---|
| நீர்கொழும்பு | 205 |
| கந்தானை | 206 |
| கம்பஹா | 207 |
| நாகம | 208 |

**மாவட்டம் 03 - களுத்துறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| களுத்துறை | 309 |

**மாவட்டம் 04 - காலி**

| நகரம் | நகர எண் |
|---|---|
| காலி | 410 |

**மாவட்டம் 05 - மாத்தறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தறை | 511 |

**மாவட்டம் 06 - அம்பாந்தோட்டை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாந்தோட்டை | 612 |

**மாவட்டம் 07 - இரத்தினபுரி**

| நகரம் | நகர எண் |
|---|---|
| இரத்தினபுரி | 713 |

**மாவட்டம் 08 - கேகாலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கேகாலை | 814 |

**மாவட்டம் 09 - புத்தளம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| புத்தளம் | 915 |
| சிலாபம் | 916 |
| வென்னப்புவ | 917 |

**மாவட்டம் 10 - குருநாகல்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| குருநாகல் | 1018 |
| குளியாப்பிட்டிய | 1019 |
| நிக்கவரட்டிய | 1020 |

**மாவட்டம் 11 - கண்டி**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கண்டி | 1121 |

**மாவட்டம் 12 - மாத்தளை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தளை | 1222 |

**மாவட்டம் 13 - நுவரெலியா**

| நகரம் | நகர எண் |
|---|---|
| தலவாக்கலை | 1323 |

**மாவட்டம் 14 - பதுளை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பதுளை | 1424 |

**மாவட்டம் 15 - மொணறாகலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மொணறாகலை | 1525 |

**மாவட்டம் 16 - அநுராதபுரம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அநுராதபுரம் | 1626 |

**மாவட்டம் 17 - பொலநறுவை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| ஹிங்குராக்கொடை | 1727 |

**மாவட்டம் 18 - திருகோணமலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| திருகோணமலை | 1828 |

**மாவட்டம் 19 - மட்டக்களப்பு**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மட்டக்களப்பு | 1929 |

**மாவட்டம் 20 - அம்பாறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாறை | 2030 |
| கல்முனை | 2031 |

**மாவட்டம் 21 - யாழ்ப்பாணம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2132 |
| மானிப்பாய் | 2133 |
| பருத்தித்துறை | 2134 |
| நெடுந்தீவு | 2135 |

**மாவட்டம் 22 - முல்லைத்தீவு**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கிளிநொச்சி | 2236 |
| முல்லைத்தீவு | 2237 |
| முழங்காவில் | 2238 |

**மாவட்டம் 23 - மன்னார்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மன்னார் | 2339 |
| முருங்கன் | 2340 |
| ஆண்டாங்குளம் | 2341 |
| பெரிய பண்டிவிரிச்சான் | 2342 |

**மாவட்டம் 24 - வவுனியா**

| நகரம் | நகர எண் |
|---|---|
| வவுனியா | 2443 |

7-934

---

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2015 (II) 2019**

2019.04.26 ஆந் திகதிய 2,121 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2015 (II) 2019 பரீட்சை அறிவித்தலின் பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டிருக்கும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாக 2019.06.24 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

02. தற்போது விண்ணப்பப்படிவத்தை அனுப்பிவைத்த விண்ணப்பதாரிகள் மீண்டுமொரு விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டியதில்லை.

03. குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றியிருக்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2019, மே 23.

05-973

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (II) 2019**

2019.04.26 ஆந் திகதிய 2,121 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (II) 2019 பரீட்சை அறிவித்தலின் பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டிருக்கும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாக 2019.06.24 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

02. தற்போது விண்ணப்பப்படிவத்தை அனுப்பிவைத்த விண்ணப்பதாரிகள் மீண்டுமொரு விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டியதில்லை.

03. குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றியிருக்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2019, மே 23.

05-974

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## ஆய விற்பனையும் குத்தகையும்

**திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகைக்கான விற்பனை - 2019/2020**

(2019, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் 2020, யூன் 30 ஆந் திகதி வரை )

2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2020, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு சில்லறையாக விற்பதற்கான, 1982.08.20 ஆந்திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகையினை விற்பனை செய்வதற்கான நடைமுறைகளுக்கேற்ப, கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து விலைகோரல் படிவங்களும், குச்சவெளி பிரதேச செயலகத்திலிருந்து பெற்று அவற்றைப் பூர்த்தி செய்வதுடன் கீழ்க் காணப்படும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக் கோரல் வைப்புப் பணத்தினை வைப்புச் செய்தமையை உறுதிப்படுத்தும் முகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும், குறிப்பிட்ட விலை கோரலில் குறிப்பிட்டுள்ள விலை நிர்ணயத்திற்கு ஆகக்குறைந்தளவான 15% ஆன பெறுமதிச் சான்றிதழும் அதனோடு இணைத்தல் வேண்டும்.

3. உரியவாறு தயாரிக்கப்பட்ட அனைத்து விலைகோரல் பத்திரங்களும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதவுறையில் இடப்படல் வேண்டும். அக் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "............................... இலக்கமுடைய . நிலாவெளி கள்ளுத்தவறணைக்கான விலைக்கோரல்" எனக் குறிப்பிடப்படுவதுடன், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவறணையின் பெயர், இலக்கம் ஆகியவற்றையும் குறிப்பிட்டு 2019.06.13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு குச்சவெளி பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அந் நேரத்திற்கு முன் குச்சவெளி பிரதேச செயலாளரின் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தரது அலுவலக அறையில் வைக்கப்பட்டிருக்கும் விலைகோரல் பெட்டியில் இடுதல் வேண்டும்.

4. விலை கோரலானது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைக் குத்தகைக்கான விற்பனை நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

5. 2019.06.13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடனேயே விலை கோரல் பத்திரங்கள் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் அனைத்து கேள்விதாரர்களும் அல்லது அவர்களின் தரகர்கள் குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. முன்வைக்கப்பட்ட விலை கோரல் படிவங்களுள் தெரிவு செய்யப்பட்ட திருப்திகரமான ஒப்பந்தக்காரரால் 02 மாதங்களுக்கு மேற்பட்ட வைப்புப் பணமும் ஒரு மாதத்திற்கான அனுமதிப்பத்திர கட்டணமும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த தினத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.

7. உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளுள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ 2019.06.13 ஆந் திகதி விற்பனை செய்ய முடியாதிருப்பின் மீண்டும் விற்பனை செய்வதற்காக 2019.06.20 ஆந் திகதி மு.ப.10.00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பாரமேற்று முடிந்தவுடனேயே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இதற்கான மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் உரித்தாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

8. பொது மக்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி தவறணை தற்போது இருக்கும் இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றப் படலாம்.

9. இது தொடர்பாக மேலதிக விபரங்களை குச்சவெளி பிரதேச செயலாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

பொன்னம்பலம் தனேஸ்வரன்,
பிரதேச செயலாளர்,

பிரதேச செயலகம்,
குச்சவெளி,
2019.05.31.

**அட்டவணை**

| இல. | பிரிவு | வலயப் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கும் நேரம் | கள்ளுத் தவறணை மூடும் நேரம் | மீளளிக்கப்படும் விலைகோரல் வைப்புப் பணம் | மீளளிப்புச் செய்யப்படாத விலை கோரல் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | குச்சவெளி | நிலாவெளி இல. 4 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 3,000.00 | ரூபா 1,000.00 |

5- 979

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : அக்செலியு கன்சல்ட்டிங் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 00209120
பதிவு முகவரி: இல. 10 1/1, யுனிட்டி பிளேஸ், கொழும்பு 3
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.02.21

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
( பிரைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5- 741

---

**அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : பிளேட்ரிக்ஸ் (பீவீஉ) எல்டீடி
கம்பனியின் இல. : பீவீ 00208306
பதிவு முகவரி: இல. 683, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.01.31

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
( பிரைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5- 742

---

**அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : ஹம்பந்தொட்ட ஒயில் ரிபைனரி (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 00210177
பதிவு முகவரி: இல. 47, அலெக்ஸாண்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.03.24

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
( பிரைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5- 743

---

**அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : கொன்டினுவம் ஏவியேஷன் (பிறைவட்) லிமிடட்
கம்பனியின் இல. : பீவீ 00211210
பதிவு முகவரி: இல. 216, டீ சேரம் பிளேஸ், கொழும்பு 10
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.04.23

சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசஸ்
( பிரைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5- 772

---

**அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : கொனெல் புரொஸ் ( பிறைவட்) லிமிடட்
பதிவிலக்கம் : பீவீ 00210812
பதிவு முகவரி: இல. 216, டீ சேரம் பிளேஸ், கொழும்பு 10
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.04.06

சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசஸ்
( பிரைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5- 773

---

**டிட்டவெல்ல என்ட் கம்பனி ( பிரைவட்) லிமிட்டட்**

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தல்

டிட்டவெல்ல என்ட் கம்பனி (பிரைவட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனி ஒன்றை 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி தொடக்கம் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் கம்பனி பதிவு இலக்கம் பீவீ 00211109 என்றும் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 6/6, ஹோட்டன் பிளேஸ், கொழும்பு 07 எனும் முகவரியில் அமைந்துள்ளது என்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

எம் என்ட் ஏ கம்பனி செக்ரடரீஸ் ( பிறைவட்) லிமிடட்,
கம்பனிச் செயலாளர்கள்.

C/O நித்தி முருகேசு என்ட் அசோசியேட்ஸ் ,
சட்டத்தரணிகள்.

இல. 28, ( 2 ஆம் மாடி),
டபிள்யூ ஏ .டீ .ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

5-774

---

**பொது அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட தனியார் பொறுப்பு கம்பனி 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி இணைக்கப்பட்டுள்ளது .-

கம்பனியின் பெயர் : எப்பியும் இன்னோவேஷன்ஸ் (தனியார்) நிறுவனம்
நிறுவனத்தின் இல. : பீவீ 00208851
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : லக் அருன, ஹிங்குருகடுவ, பஸ்ஸர

நிறுவனத்தின் செயலாளர்.

5-798

### பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ, கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரைவேட் லிமிடெட் பொறுப்பு கம்பனி 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03ஆந் திகதி இணைக்கப்பட்டுள்ளது .-

நிறுவனத்தின் பெயர் : எபெக் மெஷினரீஸ் (தனியார் ) நிறுவனம்
நிறுவனத்தின் இல. : பீவீ 00210714
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 19, ஊடகம்மேட்ட, சிறிமல் வாத்த, குன்னேபாண

நிறுவனத்தின் செயலாளர்.

5-799

---

### பொது அறிவித்தல்

2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் நிறுவனத்தின் பெயரை மாற்றுதல் இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது .-

நிறுவனத்தின் பழைய பெயர் : ஆர் என் பீ இன்வெஸ்ட்மன்ட்
நிறுவனத்தின் புதிய பெயர் : ரன்பிம மைக்ரோ கிரடிட் (தனியார்) நிறுவனம்
நிறுவனத்தின் இல. : பீவீ 105273
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 22/1/A, ஔவளபொல வத்த, தம்கொலவத்த, மாத்தளை

நிறுவனத்தின் செயலாளர்.

5-810

---

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : ரத்னவீர அசோசியேட்ஸ் ( பீவீடி) எல்டிடீ
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.11.21
பதிவிலக்கம் : பீவீ 00206495
பதிவு முகவரி: இல. 40, ஸ்ரீ தர்மாராம மாவத்தை, கோட்டை, மாத்தறை

கம்பனிச் செயலாளர்.

5-824

---

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : நேச்சர் கபானாஸ் ரிசோர்ட் ( பிரைவட்) லிமிட்டட்
கம்பனி இல. : பீவீ 00211493
பதிவு முகவரி : இல. 51டி 18, போப் குறுக்கு வீதி, 80 000 காலி
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.05.06

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட், கம்பனிச் செயலாளர்கள்.

5- 885

---

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : ரெஸ்ப்பர் இன்டர்நெஷனல் லங்கா (பீவீடி) எல்டிடீ
கம்பனி இல. : பீவீ 125784
பதிவு முகவரி: இல. 45/23, பிரேபருக் வீதி, கொழும்பு 2
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.09.22

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட், கம்பனிச் செயலாளர்கள்.

5- 886

---

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : ஷென் த்ரீ ஹன்ட்ரட் சிக்ஸ்டி ஃபைவ் (பிறைவட்) லிமிடட்
கம்பனியின் இல. : பீவீ 00210832
பதிவு முகவரி: இல. 02, நெளும் மாவத, சரணங்கர ரோட், களுபோவில, தெஹிவளை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019. 04.06

கம்பனிச் செயலாளர்.

5- 892

---

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஃபிளீட் மூவ்மென்ட் லங்கா (பிறைவட்) லிமிட்டட்
பதிவிக்கம் : பீவீ 00211396
பதிவு முகவரி: இல. 24/12ஏ, விஜயபா மாவத்தை, நாவல, நுகேகொடை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.05.03

ஸ்பெஷலிஸ்ட் நொலேட்ஜ் சென்டர் ( பிறைவட் ) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 92073.

5- 915

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : நெக்ஸ்ட் வென்டேஜ் (பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம். : பீவீ 00211378
பதிவு முகவரி : இல. 1097, பன்னிப்பிட்டிய வீதி, கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.05.02

கம்பனிச் செயலாளர்.

5- 922

---

### பொது அறிவித்தல்

